# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය (153)

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 473/9 — 1987 සැප්තැම්බර් 30 වැනි බදාදා — 1987.09.30

473/9 ஆம் இலக்கம் — 1987 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 48அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

எம். டி. ஜி. அபோத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1987 ஒற்றோபர் 01 ஆம் தேதி.

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பட்டதாரி கற்கைப்பீடக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1987 ஒற்றோபர் 1 ஆம் தேதி நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இச்சட்டத்தினதும், தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சட்டத்தின் 48அ (1) என்னும் பிரிவின்கீழ்த் தாபிக்கப்படும் (இதனகத்துப் பின்னர் "பீடம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) பட்டதாரி கற்றைப் பீடமொன்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கும், அந்தந்தப் பல்கலைக்கழகத்துக்கும் ஆணைக்குழுவுக்கும் இடையில் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான அத்தகைய கல்விக் கிளையில் அல்லது கிளைகளில் உயர்பட்டங்களுக்கும் அத்துடன் வேறு கல்விசார் சிறப்புகளுக்கும் இட்டுச் செல்லும் பயிற்சிநெறிகளை ஏற்பாடு செய்வதற்குமான நிருவாக நடுநிலையமாக இருத்தலும் வேண்டும்.

3. பீடமானது, பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் பட்டப்பின் கற்கைகளையும் அத்துடன் தனித்துவமான அல்லது பன்முக ஒழுக்காற்று ஆராய்ச்சிகளையும் ஏற்பாடு செய்து இயைபாக்கி, ஒழுங்குமுறை செய்தலும் வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக மன்றத்தின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(அ) பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட பட்டப்பின் நிறுவனங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களைத் தவிர வேறு மாணவர்களைப் பட்டப்பின் படிப்புக்குச் சேர்த்தல்;

(ஆ) பிரவேசிப்பதற்கான தேவைப்பாடுகள், பயிற்சிநெறித் தேவைப்பாடுகள், பயிற்சிநெறி உள்ளடக்கங்கள் அத்துடன் பரீட்சைச் செயற்றிட்டங்கள் என்பவற்றை விதித்துரைத்தல்;

(இ) பல்கலைக்கழகத்தில் கற்பித்தலையும் ஆராய்ச்சியையும் ஒழுங்குமுறைப்படுத்துதல் ;

(ஈ) பரீட்சையாளர்களாக நியமிப்பதற்' ஆட்களை விதந்துரைத்தல்;

(உ) உயர்பட்டங்களையும் வேறு கல்விசார் சிறப்புக்களையும் அளிப்பதற்கு மாணவர்களை விதந்துரைத்தல் ;

(ஊ) பட்டப்பின் கற்பித்தலும் ஆராய்ச்சியிலும் பீடங்களுக்கிடையிலும் பீடங்களுக்குள்ளேயும் கூட்டிணைப்பை ஊக்குவித்தல்;

(எ) ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுமாறு கல்விமான்களைத் தூண்டுதலும், அத்தகைய ஆராய்ச்சிக்கும் அறிவைப் பரப்புவதற்கும்அவசியமான வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஏ) இங்கேயும் வெளிநாடுகளிலும் பீட்டதாரிப் பீடங்களுடனும் பாடசாலைகளுடனும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் பல்கலைக்கழகங்களுடனும் தொடர்பைத் தாபித்தலும் பேணுதலும்.

4. (1) பீடத்தின் துறைத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராகவும் பீடத்தின் கல்விசார், நிருவாகத் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பீடத்தின் முதலாவது துறைத்தலைவர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துறும் துறைத்தலைவர் ஒவ்வொருவரும் பட்டதாரிக் கற்கைச் சபையால் பேரவைக்கு விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட குழாம் ஒன்றிலிருந்து பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பீடத்துறைத் தலைவர் பின்வரும் விடயங்களில் பதவியில் இருந்து அகற்றப்புட்டாலன்றி, அதாவது

(அ) முதலாவது துறைத்தலைவரின் விடயத்தில் இந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் ஆணைக்குழுவின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதவர்களால் நிறைவேற்றப்பட்ட தணிக்கை வாக்கொன்றின்மீது ஆணைக்குழுவால் அகற்றப்பட்டாலன்றியும்,

(ஆ) அடுத்துறும் துறைத்தலைவர் ஒவ்வொருவரினதும் விடயத்தில் அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டமொன்றில் பேரவையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதவர்களால் நிறைவேற்றப்பட்ட தணிக்கை வாக்கொன்றின்மீது பேரவையால் அகற்றப்பட்டாலன்றியும், அவரது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றூண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராததலும் வேண்டும்.

(4) பீடத்தின் துறைத்தலைவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர், நியமிக்கப்பட்டதன்மேல், பீடத்தின் துறைத்தலைவராக நியமிக்கப்பட்ட நேரத்தில் அப்பதவியை அவர் வகித்தால் விடயத்திற்கேற்ப பகுதித் தலைவராக அல்லது பல்கலைக்கழகப் பீடமொன்றின் துறைத் தலைவராகப் பதவி வகிப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

(5) துறைத்தலைவர் சுகயீனம் காரணமா, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதிருக்குமிடத்து பேரவையானது துறைத்தலைவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக அது பொருத்தமெனக் கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(6) பீடத்தில் துறைத்தலைவர் ஓய்வுபெறுவதன்மீது அல்லது பதவி துறப்பதன்மீது அல்லது மூன்று மாதங்களை விஞ்சிய காலப் பகுதியொன்றுக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிய முடியாதிருக்கும் விடயத்தில், பீடத்தின் துறைத்தலைவர் பதவி வறிதானதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க புதிய துறைத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(7) பதவி துறக்கின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற துறைத்தலைவர் ஒருவர், துறைத்தலைவரான அவரது நியமனத்திற்கு நேர்முன்னர் உயர்கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராக இருந்தால், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பிச் செல்லலாம். ஆயினும், அவர் அறுபத்தைந்து வயதை நிறைவு செய்தவராய் இருத்தல் வேண்டும்.

5. (1) ஒவ்வொரு பீடமும், பின்வரும் ஆட்களைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் " சபை " எனக் குறிப்பிடு செய்யப்படும்) பட்டதாரிக் கற்கைச் சபையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) பீடத்தின் துறைத்தலைவர்; இவரே தவிசாளராதல் வேண்டும்;

(ஆ) பீடத்தைத் தவிர்ந்த வேறு பல்கலைக்கழகப் பீடம் ஒவ்வொன்றிலுமிருந்து துறைத்தலைவர் அல்லது ஒரு பிரதிநிதி;

(இ) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட பட்டப்பின் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் ;

(ஈ) பல்கலைக்கழகம் பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ;

(உ) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களல்லாதவர்களும் பல்கலைக்கழக மூதவையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களுமான இரண்டு உறுப்பினர்கள் ;

(ஊ) பீடத்திலுள்ள கற்கைச் சபைகளிலிருக்கும் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான ஆசிரியர்களிடையேயிருந்து ஆணைக்குழுவுடனன ஒருப்பாட்டுடன் பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒரு பிரதிநிதி.

(2) பல்கலைக்கழகப் பதிவாளர் அல்லது துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் சபையின் பொதுச் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டதுக்கான கூட்ட நடப்பெண் அதன் உறுப்பாண்மையின் அரைவாசியாதல் வேண்டும்.

(4) சபையானது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஓர் ஆளையோ ஒன்றுக்கு மேற்பட்டவர்களையோ ஒத்துத் தேர்ந்தெடுக்கலாம். ஆயின் ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளெவரும் சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையுடையவராதல் ஆகாது.

(5) சபையின் உறுப்பினர் எவரும் தமது கைப்பட பீடத்தின் துறைத்தலைவருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

ஆயினும், உறுப்பினர் எவரும் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்கினால் அவரது [illegible]னுறுபவர் அவாது பதவியை முன்னரே வறிதாக்கினலன்றி [illegible]ரது முன்னமைந்துவரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியிருக்கும் பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் கூட்டமொன்றுக்கு வருகை தரா திருப்பின், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு, சமூகமளித்திருக்கும் உறுப்பினர்கள் தம்மிடையேயிருந்து தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(7) சபையானது ஒவ்வோராண்டிலும் பத்து தடவைகளுக்குக் குறையாமல் கூடும் வகையில் அவசியப்படும்போது கூடுதல் வேண்டும்.

6. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது மூதவையின் பணிப்பிற்கமைய பீடத்தின் அறிவுறுத்துரை, கல்வி, ஆராய்ச்சி, அத்துடன் பரீட்சைகள் என்பனமீது கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பந்தியால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுன் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும் :—

(i) பீடம் தொடர்பிலான எல்லாக் கருமங்களையும் ஒழுங்கு முறைப்படுத்துதலும், தீர்மானித்தலும் ;

(ii) பீடத்திற்குட்பட்ட பல்வேறு கல்வித்துறைகளிலும் அளிக்கப்பட வேண்டிய பட்டப்பின் பட்டங்கய்யும் வேறு கல்வி சார் சிறப்புக்களையும், பின்பற்றப்படவுள்ள கற்கை நெறிகளையும், பயிற்சியையும் அத்தகைய பட்டங்களுக்கும் அத்துடன் வேறு கல்விசார் சிறப்புக்களுக்கும் தகைமை பெற விரும்பும் மாணவர்கள் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் வேண்டும்;

(iii) எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(iv) பீடத்தில் உளதாம் கல்வித்துறைகளை மீள ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான செயற்திட்டங்களை மூதவைக்கும், பேரவைக்கும் விதந்துரைத்தல் ;

(v) மூதவையின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, மாணவர்கள் பீடத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான அல்லது பதிவு செய்யப்படுவதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(vi) பட்டப்பின் பட்டங்களையும் வேறு கல்விசார் சிறப்புக்களை யும் வழங்கபெறுதற்குத் தகுதியான ஆட்களின் பெயர் களை மூதவைக்கு விதந்துரைத்தல் ;

(vii) கல்விசார் ஆலோசனைக் குழுவொன்றையும் பொருத்தமான தென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை யினதான துணைக்குழுக்களையும் நியமித்தல்;

(viii) பின்வரும் கருமங்கள் தொடர்பில் மூதவைக்கு விதப்புரை செய்தல் :—

(அ) ஏதேனும் கல்விக்கிளையில் பாடத்திட்டங்கள், கற்கை நெறிகள், கற்பித்தல் ஆராய்ச்சி என்பன ;

(ஆ) பட்டப்பின் படிப்பிலும் ஆராய்ச்சியிலும் இடையிட்டு ஒழுக்காற்றுக் கற்கைகளுக்கும் இடையிட்டு பீட ஒருங்கிணைப்புக்குமான வசதிகள் ; அத்துடன்

(ix) மேலே கூறப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றிற்கு இடைநேர்விளைவானவையாக விருப் பினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, பீடத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு தேவைப்படக்கூடியவாறான அத் தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் புரிதல்.

7. (1) பீடமானது பல்கலைக்கழகமும் ஆணைக்குழுவும் காலத்துக் க் காலம் உடன்பட்டுக் கொண்டாவறு தேவைப்பட்டவாறான அத் தைகய எண்ணிக்கையினவான கற்கைச் சபைகளைக் கொண்டிருத் ல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பீடமொன்று ஆரம்பத்தில் பின்வரும் கைகை சபைகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது அனைத்தையும் காண்டிருத்தல் வேண்டும் :

(i) புவிவிஞ்ஞானமும், சுற்றாடற் கல்வியும்

(ii) வரலாற்று, சமூகக்கல்வி

(iii) சமய, தத்துவப் படிப்புகள்

(iv) மொழி, பண்பாட்டுப் படிப்புகள்

(v) அபிவிருத்திப் படிப்புகள்

(vi) சட்டப்படிப்புகள்.

(2) கற்கைச்சபை ஒவ்வொன்றும் துறைத் தலைவரின் விதப்புரை ன்மீது ஆராய்ச்சியின் பேராசிரியர்களிடையேயும் சிரேட்ட இணை ரிமையாளர்களிடையேயுமிருந்து சபையால் நியமிக்கப்பட்ட தவி ளர் ஒருவரைத் கொண்டிருத்தல் வேண்டும்.

8. கற்கைச் சபை ஒவ்வொன்றும் பின்வரும் தத்துவங்களையும் டமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும் :—

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விட யத்தைப் பரிசீலனை செய்து, அதன்மீது அறிக்கை சமர்ப் பித்தல் ;

(ஆ) பயிற்சிநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் அல்லது திட்டங்கள் அத்துடன் கற்கைச் சபையின் பரீட்சை என் பன தொடர்பான எல்லா விடயங்கள் மீதும் பட்டதாரிப் படிப்புச் சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் ;

(இ) ஏதேனும் சிறரிபுப் பாடத்தை அல்லது பாடங்களைப் பரி சீலனைசெய்து அதன்மீது அவற்றின்மீது அறிக்கை சமர்ப் பிக்கும் நோக்கத்திற்கு குழுக்களை நியமித்தல் ;

(ஈ) பயிற்சி நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்கள் பிர வேசிப்பதற்கான தேவைப்பாடுகளை சபைக்கு விதந் துரைத்தல் ;

(உ) ஆசிரியர்களாகவும் பரீட்சையாளர்களாகவும் அங்கிகரிக்கப் படுவதற்கு பொருத்தமான ஆட்களை விதந்துரைத்தல்;

(ஊ) பட்டப்பின் பட்டங்களையும் வேறு கல்விசார் சிறப்புகளை யும் அளிக்கப் பெறுவதற்குத் தகவுடையவர்களான, விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்து விதித்துரைக்கப்பட்ட வேறு நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ள ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல்;

(எ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், பொருளு தவி, உதவிப்பணம், பதக்கங்கள், வேறு பரிசுகள் என்ப வற்றின் அளிப்புக்கு பொருத்தமான ஆட்களின் பெயர் களை சபைக்கு விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஏ) உளதாம் கற்கைச் சபைகளை மீள ஒழுங்குமுறைப்படுத்து வதற்கும், புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்குமான செயற்றிட்டங்களை சபைக்கு விதந் துரைத்தல்.

9. பீடத்தின் நிரந்தர ஆசிரியர் தொகுதி பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) சிறந்த கல்விசார் சாதனை பெற்ற ஆட்களிடையேயிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பல் கலைக்கழக பீடங்களிலிருந்து பேரவையால் நியமிக்கப் பட்ட ஆராய்ச்சிப் பேராசிரியர்கள் ;

(ஆ) வெளியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்கு பேரவை யால் நியமிக்கப்பட்ட சிரேட்ட இணையுரிமையாளர்கள் ;

(இ) (i) பல்கலைக்கழக பீடங்களிலிருந்து மூன்றாண்டு காலப் ப்குதிக்கு;

(ii) வெளியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்கு; பேரவையால் நியமிக்கப்பட்ட இணையுரிமையாளர்கள்;

(ஈ) ஆணைக்குழுவுடனான ஒருப்பாட்டுடன் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணியாட் டொகுதி.

10. பீடத்தின் முதலாவது ஆசிரியர் தொகுதி ஆணைக்குழுவுடன் ஒருப்பாட்டுடன் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத் துறும் ஆசிரியர் நியமனம் ஒவ்வொன்றும் பேரவையால் செய் யப்படுதல் வேண்டும்.

11. இக்கட்டளைச் சட்டத்தில்—

"ஆராய்ச்சிப் பேராசிரியர்" என்பது ஆராய்ச்சி என்ற வகையில் அவரது படிப்புத் துறையில் முக்கியமான பங்களிப் பொன்றைச் செய்துள்ள பேராசிரியர் ஒருவர் அல்லது இணைப்பேராசிரியர் ஒருவர் எனப் பொருள்படும்;

"சிரேட்ட இணையுரிமையாளர்" என்பது சிறந்த கல்விசார் சாத னையைக் கொண்ட பேராசிரியர்கள் அல்லது இணைப்பேரா சிரியர்கள் எனப் பொருள்படும்.

"இணையுரிமையாளர்" என்பது சிறந்த கல்விசார் சாதனையைக் கொண்ட சிரேட்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரை யாளர் ஒருவர் என்று பொருள்படும்;

"சட்டம்" என்பது 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கப் பல் கலைக்கழகங்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழ கங்கள் சட்டம் எனப் பொருளாகும் ;

"தோதான சாதனம்" என்பது சட்டத்திற்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், துணைவிதி அல்லது விதி எனப் பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

10-439

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.